பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**23 12 2025** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நியூஸிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மத்திய அரசின் வெளியுறவு கொள்கைக்கு கிடைத்த வெற்றி என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

**2.** இந்த ஆண்டு **Rabi** பயிர்கள் **580** லட்சம் ஹெக்டேருக்கு மேற்பட்ட பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**3.** எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த **10** மீனவர்களைக் கைது செய்துள்ளனர்.

**4.** அமெரிக்க கடற்படை உலகியேயே மிகப்பெரிய மற்றும் அதிநவீன போர்க்கப்பலை தயாரிக்க இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**5.** இந்தியா - இலங்கை இடையிலான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட்டின் இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்த ஆண்டு **Rabi** பயிர்கள் **580** லட்சம் ஹெக்டேருக்கு மேற்பட்ட பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டைக் காட்டிலும் சுமார் லட்சம் ஹெக்டேர் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோதுமைப் பயிர் **301** லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் பயிரிடப்பட்டுள்ளதாகவும், பருப்பு வகைகள் **126** லட்சம் ஹெக்டேர் அளவிலும், நெல் **13** லட்சம் ஹெக்டேர் என்ற அளவிலும் பயிரிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

நியூஸிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுக்கள் இறுதி செய்யப்பட்டிருப்பது, மத்திய அரசு பின்பற்றி வரும் வெளியுறவு கொள்கைக்கு கிடைத்த வெற்றி என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையிலான வெளியுறவு கொள்கையை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பின்பற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், சிறு குறு தொழில்துறையினரும், விவசாயிகளும், மாணவர்களும், இளையோரும், புதுமை கண்டுபிடிப்பாளர்களும் பயனடைவார்கள் என்று திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கடந்த 6 மாதங்களில் சுமார் 600 கோடி ரூபாய் அளவிலான சைபர் குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நிதி மோசடி அபாயக் குறியீட்டு உதவியுடன் இந்த இழப்புகளைத் தடுக்கு முடிந்ததாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட வங்கிகள், மூன்றாம் தரப்பு செயலி வழங்குநர்கள் மற்றும் பரிவர்த்தனையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், மின்னணு நுண்ணறிவியல் தளத்தை பயன்படுத்த தொடங்கியுள்ளதாகவும், இதன் காரணமாக ஆன்லைன் பணப் பரிவர்த்தனை பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய தேசிய கட்டண கழக உதவியுடன் இந்த நிதி மோசடி அபாயக் குறியீடு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

பண மோசடி தொடர்பாக ஏதாவது புகார் இருப்பின் **Sanchar Saathi** என்ற இணையதளத்தை மக்கள் பயன்படுத்துமாறு அந்த அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

நாடுமுழுவதும் காய்ச்சல் பாதிப்புகளை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பான இரண்டு நாள் மாநாட்டினை காணொலி வாயிலாக தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார்.

காய்ச்சல் பாதிப்பு குறித்த கண்காணிப்பு நடவடிக்கைகள், தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இந்த மாநாட்டில் இதுகுறித்த ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெறும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

எட்டு முக்கிய துறைகளின் உற்பத்தி, கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், ஒன்று புள்ளி எட்டு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சிமெண்ட், எஃகு, உரம் மற்றும் நிலக்கரி துறைகள் சீரான வளர்ச்சியை கண்டுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தக துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நிலக்கரி துறையின் உற்பத்தி 2 புள்ளி ஒன்று சதவீதமும், உரத் துறையின் உற்பத்தி 5 புள்ளி ஆறு சதவீதமும், சிமெண்ட் உற்பத்தி 14 புள்ளி ஐந்து சதவீதமும். எஃகு உற்பத்தி 6 புள்ளி ஒன்று சதவீதமும் அதிகரித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவின் Blue Bird செயற்கைக்கோள் நாளை காலை 8.54 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்படுகிறது.

இதற்கான கவுண்ட்டவுன் இன்று தொடங்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

LVM3-M6 ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுகிறது.

இந்த செயற்கைக்கோள் மூலம் தொலைதூர கிராமங்களுக்கு மொபைல்போன் இணைப்பு மற்றும் அதிவேக இணையசேவையை இந்த செயற்கைக்கோள் வழங்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் மருத்துவ சேவைகள் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற விழா ஒன்றில் பேசிய அவர், மருத்துவ வசதிகளை மிகக் குறைந்த செலவில் சாதாரண மக்களுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் 62 கோடி மக்களுக்கு 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இலவச மருத்துவ காப்பீடு திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் குறைந்த விலையில் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

<<<<>>>>

ஹரியானாவில் வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான வேலைநேரம் 9 மணி நேரத்தில் இருந்து 10 மணி

நேரமாக உயர்த்தும் சட்டத்திற்கு அம்மாநில சட்டப்பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அனில் விஜ் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் தொழிலாளர்கள் வாரத்திற்கு குறைந்தபட்சம் 48 மணி நேரம் பணியாற்றுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஹரியானவில் உள்ள ஒவ்வொரு தனியார் வர்த்தக நிறுவனங்களும், மாநில அரசிடம் பதிவு செய்ய வேண்டும் என்றும் திரு. அனில் விஜ் கூறியுள்ளார்.

<<<<>>>>

எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 10 மீனவர்களைக் கைது செய்துள்ளனர்.

ராமேஸ்வரத்தில் இருந்து போஸ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் இலங்கை கடல் எல்லையில் மீன் பிடித்ததாக கூறி அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள 723 ஒப்பந்த செவிலியர்களுக்கு விரைவில் நிரந்தர பணி நியமன ஆணைகள் வழங்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி ஒப்பந்த செவியலியர்களுக்கு ஊதியத்துடன கூடிய மகப்பேறு விடுப்பு வழங்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

மேலும் 5 புதிய செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தெலங்கானாவில் 3 கட்டங்களாக நடைபெற்ற கிராமப் பஞ்சாயத்து தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நேற்று பதவியேற்றுக்கொண்டனர்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அம்மாநில கிராம பஞ்சாயத்து மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திருமதி **Anusiya Seethaka** வாழ்த்தியுள்ளார்.

வெற்றி பெற்றவர்கள் மக்கள் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவற்றின் தீர்வை நோக்கி பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க கடற்படை உலகியேயே மிகப்பெரிய மற்றும் அதிநவீன போர்க்கப்பலை தயாரிக்க இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க கடற்படையில் **Golden Fleet** என்ற அமைப்பின் கீழ் இந்த மிகப்பெரிய போர்க்கப்பல் உருவாக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

இதுவரை உருவாக்கப்பட்ட போர்க்கப்பல்களிலேயே மிகப்பெரியதும், அதிக சக்தி கொண்டதுமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

**Hypersonic** ஏவுகணைகள், லேசர் ஆயுதங்களை உள்ளடக்கிய கப்பலாக இது இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் போர்க்கப்பலை உருவாக்குவதற்கு தமது ஆலோசனைகளை வழங்க இருப்பதாகவும் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணையின் உறுதித் தன்மையை பரிசோதிப்பதற்காக ஆளில்லா தானியங்கி இயந்திரம் மூலம் இன்று சோதனை செய்யப்படுகிறது.

இந்த சோதனையானது உச்சநீதிமன்ற வழிகாட்டுதலில் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் ஆலோசனையின்படி மத்திய குழு விஞ்ஞானிகள் இந்த ஆய்வில் ஈடுபட உள்ளனர்.

இதற்காக நேற்று நீருக்கு அடியில் செல்லும் தானியங்கி இயந்திரத்தின் பாகங்களை இணைக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

அப்போது இயந்திரன் செயல்பாடுகளை அவர்கள் பரிசோதித்தனர்.

<<<<>>>>

இந்தியா - இலங்கை இடையிலான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட்டின் இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா முதல் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

**<<<<The End>>>>**